**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள். 13.09.2021**

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13.09.2021ம் தேதி திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதராண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22–ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி மான்ய கோரிக்கையின் நகராட்சியில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காங்கள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சியில் வார்டு எண்.22 குலசேகரப்பாண்டியன் லே–அவுட்டில் சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை, மின்விளக்கு வசதி, கழிப்பிடத்தை புணர்ப்பித்தல், பெரியவர்களுக்கு உடற்பயிற்சி சாதனங்களுடன் கூடிய வசதிகளுடன் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.50.00/–இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.2730/2021/இ1**
**தீர்மான எண் : 156** அனுமதி அளிக்கப்படுகிறது.

**2.**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 35871/2014/இ1 நாள்.08.09.2021 ன் கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–2022 ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறைமான்யக் கோரிக்கையில் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை (LED) விளக்குகளாக மாற்ற செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் அதற்கான கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 2626 எண்ணம் CFL விளக்குகளை 20,40,72,100,200 வாட்ஸ் ஒளி உமிழ் (LED) விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிகள் செய்திட திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள எண்ணம் 2626 CFL விளக்குகளை 20,40,72,100,200 வாட்ஸ் ஒளி உமிழ் (LED) ) விளக்குகளாக மாற்றம் செய்தல். | 310.00 |

**அலுவலகக்குறிப்பு :-**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ.310.00 இலட்சத்தினை முழுமானியமாக வழங்க வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

ந.க.எண்.2855/2021/இ1
**தீர்மான எண் : 157** அனுமதி அளிக்கப்படுகிறது.

**3.** இந்நகராட்சி Jel Jeevan Mission (Urban) or Amrut 2.0 திட்டத்தின் கீழ் இந்நகராட்சி 33 வார்களிலும் உள்ள சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புடன் எல்லா தெருக்களிலும் ஆலோசகர் மூலம் கீழ்க்கண்ட சர்வே செய்யும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.10.00/– ஆகும். இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Description |
|---|---|
| 1. | Road Map width and Ist class (Paved or unpaved, cement etc) and level |
| 2. | Drainage Network map with Culvert with level |
| 3. | Light pole locations collections and map preparation with level |
| 4. | Water Supply main to distribution pipe with level. |
| 5. | Household water connection public tap. |

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2856/2021/இ1
**தீர்மான எண் : 158** அனுமதி அளிக்கப்படுகிறது.

**4.** போடிநாயக்கனூர் நகராட்சி 15வது மத்திய மான்ய நிதிக்குழு திட்டம் 2020–2021ம் ஆண்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் பணிகள் (4) மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்தமைக்கு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அவர்களின் மூலம் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்ட விளம்பரக் கட்டணத் தொகை வழங்க அனுமதிக்கு

| வ.எண் | நாளிதழ் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | உள்ளாட்சி சாரல், சென்னை | 23100.00 |
| 2 | மதுரை மணி, மதுரை | 31752.00 |
| | மொத்தம் | **54852.00** |

**அலுவலகக் குறிப்பு** :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பட்டியல் தொகையினை பொதுநிதியிலிருந்து மற்றும் குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3340/2020/இ1
**தீர்மான எண் : 159** அனுமதி அளிக்கப்படுகிறது.

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.